[1986 நவம்பர் 22

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு உறுதி மொழிக் குழுவின் கீழ்காணும் அறிக்கையை அரசு உறுதி மொழிக் குழுத் தலைவரின் சார்பாக நான் அவைக்கு அளிக்கிறேன்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1986—87-ஆம் ஆண்டுக்கான அரசு உறுதி மொழிக் குழுவின் மூன்றாவது (எட்டாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கை.

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள்) நியமனத் திருத்தச் சட்ட முன்வடிவு 1986

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

'' 1986-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அறிமுகம் செய்ய அனுமதி கேட்கப்பட்டிருக்கிற 1986 ஆம் ஆண்டு வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவை, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் அறிமுக நிலையிலேயே நான் எதிர்க்கிறேன். இந்தத் தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை நீடிப்பதற்குக் காரண காரிய விளக்கத்திலே சொல்லப்பட்டிருக்கிற காரணம், '' 1983-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் (தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு முப்பதாவது சட்டம்) தமிழ்நாடு அரசு சிறப்பு அரசிதழில் 1983-ஆம் ஆண்டு நவம்பர் 1-ஆம் நாளன்று வெளியிடப்பட்டது. அதன் கீழ் விதிகளை வகுக்கவும், வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல்கள் நடத்தவும் இன்னும் சில காலம் ஆகுமாதலால் ....'' என்று இன்டெஃபெனட் டைம் போட்டு விளக்கம் கொடுக்கப்பட்டு வெகுகாலம் ஆகிவிட்டதால் இன்னும் தெளிவான நிலை ஏற்படாததால், பொது மக்களுடைய, மக்கள் பிரதிநிதிகளுடைய ஜனநாயக நாற்றங்கால் என்று சொல்லக்கூடிய கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசு விரைவிலே தேர்தலே நடத்தாமல் இருப்பதால் அறிமுக நிலையிலேயே நான் இதை எதிர்க்கிறேன்.

1986 நவம்பர் 21]

திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்ட 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன் வடிவை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் கடுமையாக ஆட்சேபிக்கிறேன். அதற்கான காரண காரியங் களை ஆய்விற்கு வருகிறபோது எடுத்துச் சொல்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை அறிமுகப்படுத்தும் நிலையிலேயே எதிர்க்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. 1983 ஆம் வருஷத்தில் இந்தக் கூட்டுறவுச் சட்டம் இந்த அவையில் நிறைவேற்றப்பட்ட நேரத்தில் இந்த அவைக்குக் கொடுக்கப் பட்ட உறுதி மீறப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அன்றையதினம் அமைச்சர் அவர் கள், இரண்டு மாதங்களுக்குள் விதிகளை ஏற்படுத்தி தேர்தல் நடத்தப்படும் என்று சொன்னார்கள். அதற்கு மாறுபட்ட முறையில் மீண்டும் இந்த அலுவலர்களின் பதவிக் காலத்தை அரசு நீட்டித்திருக்கிறது. ஆகவே தேர்தலை நடத்த வேண்டுமென்று கோரி இந்தச் சட்டமுன்வடிவை நான், எதிர்க்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் தலைவர் அவர்களே கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டு மென்ற கோரிக்கை நீண்ட காலமாக அரசால் கவனிக்கப் படாமல் இருக்கிறது. சட்டம்கூட வந்தாகிவிட்டது. எனவே விரைவிலே தேர்தலை நடத்த வேண்டும். தேர்தலை நடத்து வதற்கான காலம் குறிப்பிடப்படாததால் எங்கள் கட்சியின் சார்பில் இதை எதிர்க்கிறேன். விரைவிலே தேர்தலை நடத்த வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி, ''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்றது. அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்ட முன் வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

8. அறிவிப்புகள்.

(அ) முதல் துணை நிதிநிலை அறிக்கை 1986- 87.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

1986–87 ஆம் ஆண்டுக்கான கூடுதல் மானியங்களுக்கான கோரிக்கைகளைப் பேரவை முன் மொழிவது குறித்து ஆளுநரிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப் பெற்றுள்ளது:—

MESSAGE.

In pursuance of Article 203, Clause (3) of the Constitution of India, I, Sundarlal Khurana, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the demands for further grants for the year 1986-87 as detailed in the annexure enclosed.

(9) முதல் துணை நிதிநிலை அறிக்கை 1986-87
விவாதமும், வாக்கெடுப்பும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : *1986–87* ஆம் ஆண்டுக்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கை மீது விவாதம்.

பேரவை விதிகளின்படி இன்று விவாதமும், நிதியமைச்சர் அவர்களின் பதிலுரையும் ஒரு மணிக்கு முடிந்து மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு எடுக்கப்படும்.